STOP கொவிட்-19 மற்றும் சுவாச வைரஸ்கள்

குழந்தைகள்/மாணவர்கள்/பெரியவர்களுக்கான தினசரிக் கண்காணிப்பு. குழந்தைக்காக அவரது பெற்றோர்/பாதுகாவலர் இதை நிரப்பலாம்.

2022 செப்டம்பர் 6

1. உங்களுக்கு இதில் ஏதாவது புதிய அறிகுறிகள் அல்லது மோசமடையும் அறிகுறிகள் உள்ளனவா*?

A) ஒன்று அல்லது அதற்கு மேல்:

ஆம் ☐
இல்லை ☐

காய்ச்சல் > 37.8°C மற்றும்/அல்லது குளிர் | இருமல் | சுவாசிப்பதில் சிரமம் | சுவை/வாசனை உணர்வு குறைதல்/இழத்தல்

B) இரண்டு அல்லது அதற்கு மேல்:



தொண்டைப்புண் | தலைவலி | மிகவும் சோர்வாக உணர்தல் | மூக்கு ஒழுகுதல்/மூக்கடைப்பு | தசை வலி/மூட்டு வலி | குமட்டல்/வாந்தி/வயிற்றுப்போக்கு

2. கடந்த 10 நாட்களில் உங்களுக்கு கொவிட்-19 தொற்று உறுதிசெய்யப்பட்டதா? அறிகுறி(கள்) இருக்கிறதா?

ஆம் ☐
இல்லை ☐

Q.1 அல்லது 2 க்கு "ஆம்" எனில் வீட்டிலேயே இருக்கவும் அத்துடன் தனிமைப்படுத்திக் கொள்ளவும் + **மேலதிக முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றவும்****

3. உங்களுக்கு 1(B)ல் ஒரே ஒரு அறிகுறி மட்டும் இருக்கிறதா அல்லது பின்வரும் ஏதேனும் ஒரு புதிய அல்லது மோசமடையும் அறிகுறி இருக்கிறதா?*

ஆம் ☐
இல்லை ☐

- வயிற்று வலி
- இளஞ்சிவப்புநிற கண்கள்
- பசியுணர்வு குறைதல் அல்லது பசியின்மை

"ஆம்" எனில் உங்களது அறிகுறிகள் குறையும் வரை மற்றும் உங்களுக்கு ஏதேனும் புதிய அறிகுறிகள் தோன்றாமல் இருக்கும் வரை 24 மணிநேரத்திற்கு வீட்டிலேயே இருக்கவும் (குமட்டல்/வாந்தி/வயிற்றுப் போக்கு என்றால் 48 மணிநேரம்)

4. நீங்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும், தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் பள்ளி அல்லது குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு வரக்கூடாது என உங்களுக்கு சொல்லப்பட்டதா?(உதாரணம்: ஒரு மருத்துவர், ஃபெடரல் பார்டர் ஏஜெண்ட், பொது சுகாதாரம் போன்றோரால்)?

ஆம் ☐
இல்லை ☐

"ஆம்" எனில் வீட்டிலேயே இருக்கவும் + உங்களுக்கு சொல்லப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்

5. கொவிட்-19 அறிகுறிகள் கொண்ட அல்லது தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் நீங்கள் நெருக்கமான தொடர்பில் இருந்தீர்கள் என உங்களுக்கு சொல்லப்பட்டதா?

ஆம் ☐
இல்லை ☐

"ஆம்" எனில் மேலதிக முன்னெச்சரிக்கைகளை பின்பற்றவும் + அறிகுறிகள்* தோன்றினால், உடனே தனிமைப்படுத்திக் கொள்ளவும்

*உங்களுக்கு ஏற்கனவே இருக்கும் உடல் பிரச்சினையால் அறிகுறி தோன்றினால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அறிகுறி புதியதாக, வித்தியாசமானதாக இருந்தால் அல்லது மோசமடைந்தால் "ஆம்" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். கொவிட்-19 அல்லது ஃப்ளூ தடுப்பூசி செலுத்திக் கொண்ட 48 மணிநேரத்திற்கு பிறகு குறைவான சோர்வு, தசை அல்லது மூட்டு வலி போன்றவை இருந்தால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

** மேலதிக நடவடிக்கைகளைப் பின்பற்றுவது என்பது: அனைத்து பொது அமைப்புகளிலும் நன்கு பொருந்தக்கூடிய முகக்கவசங்களை அணிவது, உங்கள் முகக் கவசத்தை கழற்ற வேண்டிய நடவடிக்கைகளைத் தவிர்ப்பது மற்றும் அதிக ஆபத்தில் உள்ள நபர்களையோ அமைப்புகளையோ பார்க்கச் செல்லாதிருத்தல் என்பவற்றைக் குறிக்கும்.